மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சி புதை சாக்கடை திட்டத்திற்கான விரிவான ஆய்வை மேற்கொள்ள ரூ. 50,000-க்கான ஆய்வு மதிப்பீட்டினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுமதித்துள்ளது. திருப்பூர் நகராட்சி இத் திட்ட ஆய்வு வேலைக்காகும் முழுத் தொகையையும் செலுத்தியவுடன் திட்ட ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. துரைசாமி: நகராட்சி மன்றம் ஐம்பதாயிரம் ரூபாய் செலுத்துவதை வருகின்ற மார்ச் இறுதிக்குள் செலுத்தினால் போதும் என்று மானேஜிங் டைரக்டர் தெரிவித்தார். அந்த அடிப்படையில் நகராட்சி ஒரு பகுதியைச் செலுத்திவிட்டது. மீதியைக் குறிப்பிட்ட நேரத்தில் செலுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் எவ்வளவு காலத்தில் முடியும் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது பத்தாயிரம் ரூபாய் அளவுக்குத்தான் ஆய்வு வேலைப் பணிகளுக்காக நகராட்சியிலிருந்து பணம் செலுத்தியிருக்கிறார்கள். ஆய்வு மதிப்பீடு ஐம்பதாயிரம் ரூபாய் ஆகலாம் என்று குடிநீர் வாரியத்திலிருந்து நகராட்சி மன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். மார்ச் மாதத்திற்குள் முழுத் தொகையையும் நகராட்சி கட்டிவிடும் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகை வந்த பிறகு, ஆய்வுப் பணிகள் முடிந்த பிறகுதான் அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்று அறுதியிட்டுக் கூற முடியும்.

அரசு உயர்நிலைப்பள்ளிகள்

* 83. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் A பிரிவு B பிரிவு என்றும் பாகுபாடு இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எவ்வித பாகுபாடுமின்றி ஒருங்கு இணைந்துச் செயல்படும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

TRUTH ALONE TRIUMPHS